DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 863/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | | | |
| Name | : | புஷ்பம் | Age | : | 73 |
| W/o | : | நவநீதகிருஷ்ணன் | Occupation | : | ஆசிரியர் (ஓய்வு) |
| Village | : | கோகுலம் நகர், பட்டிணம்காத்தான் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 06th day of March 2026.

**06.03.2026**

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் தமிழ் இளங்கலை பட்டதாரி படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம், தமிழ் படிக்கத்தெரியுமா என்றால் ஆங்கிலம் படிக்கத்தெரியாது தமிழ் படிக்கத்தெரியும். நான் தான் புஷ்பம் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னால் ஆதாரம் தாக்கல் செய்ய இயலும். இந்த வழக்கு யாருக்கு எதிராக போட்டுள்ளேன் என்றால் பாண்டியராஜ் என்பவருக்கு எதிராக போட்டுள்ளேன். இந்த வழக்கில் நான் எவ்வளவு தொகை கேட்டுள்ளேன் என்றால் ரூ. 20,47,464/- நான் கொடுத்த தொகை. எதிரி பாண்டியராஜனுக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் இல்லை. இடம் வாங்குவதற்காக பாண்டியராஜனிடம் ரூபாய் கொடுத்தேன். பாண்டியராஜனுக்கு தனிப்பட்ட முறையில் கடனாக கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இடத்திற்காக தான் கொடுத்தேன். தனிப்பட்ட முறையில் பாண்டியராஜன் பணம் எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. இடத்திற்காக தான் கொடுத்துள்ளார். மனுவில் ரூ. 20,47,464/- கேட்கவில்லை ரூ. 10,47,464/-தான் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

2. பாண்டியராஜனிடம் இடம் வாங்குவதற்காக தான் கொடுத்தேன் கடனாக கொடுக்கவில்லை. எந்த ஏரியாவில் இடம் வாங்கியதாக பார்த்தேன் என்றால் சாலிகிராமத்தில் இடம் வாங்கியதாக பார்த்தேன். வாங்கிய இடம் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் ஞாபகம் இல்லை. மனை வாங்கியதற்கு போன இடம் அட்ரஸ் சொல்ல முடியுமா என்றால் செங்கல்பட்டு மாவட்டம், சாலிகிராமம், எம்ஜிஆர் நகர். நான் இடம் ஹோம் லேண்ட் ப்ராப்பர்டீஸ் என்பவர்களிடம் வாங்க சென்றேன் என்றால் சரிதான். மேற்சொன்ன நிறுவனம் பங்குதாரர் நிறுவனமா, தனிநபர் நிறுவனமா என்றால் தெரியவில்லை. ஹோம் லேண்ட் ப்ராப்பர்டீஸ் என்பது பங்குதாரர் நிறுவனம் என்றாலும், அதனிடம் தான் நான் நிலம் வாங்க சென்றேன் என்றாலும் தெரியவில்லை. ஹோம் லேண்ட் ப்ராப்பர்டீஸ் நிறுவனத்தில் யார், யார் பங்குதாரர்கள் என்றால் பாண்டியராஜன்

மற்றும் பாலசர்குணம் ஆகியோர்கள் ஆவார்கள். ஹோம் லேண்ட் ப்ராப்பர்டீஸ் இந்த வழக்கில் ஒரு எதிரியாக சேர்த்துள்ளேன் என்றால் இல்லை.

**3.** பாலசர்குணம் என்பவரை இந்த வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எந்த தேதியில் யார், யார் இடத்தை பார்த்தோம் என்றால் நானும், எனது மகளும் பார்த்தோம். எனது மகள் எங்கு உள்ளார் என்றால் இராமநாதபுரத்தில் தான் உள்ளார். அந்த இடத்தை யார் காண்பித்தார்கள் என்றால் பாண்டியராஜன். 1 சதுர அடி எவ்வளவு விலை என்றால் 2023 ம் வருடம் ஞாபகம் இல்லை. இடம் வாங்குவதற்கு அக்ரிமெண்ட் எதுவும் போட்டேனா என்றால் இல்லை. டோக்கன் அட்வான்ஸ் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். யாரிடம் கொடுத்தேன் என்றால் பாண்டியராஜன் என்பவரிடம் ரூ. 10,000/– கொடுத்தேன். அதற்காக எதுவும் ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. இடத்தின் பத்திரங்கள் எதுவும் நான் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. மனை வாங்குவதற்கு கொடுத்த பணம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் நாங்கள் வைத்திருந்தோம். அந்த பணத்தை எங்கு சேமித்து வைத்திருந்தேன் என்றால் பேங்கில் சேமித்து வைத்திருந்தேன். பேங்க் புத்தகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரூ. 20,00,000/–யை எப்படி நான் அவரிடம் கொடுத்தேன் என்றால் காசோலை மூலமாகவும், பேங்க் மூலமாகவும் கொடுத்தேன். ரொக்கமாக எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

**4.** ம.சா.ஆ. 1 மற்றும் ம.சா.ஆ.2 ஆகியவைகள் நான் தாக்கல் செய்த காலைகள் என்றால் சரிதான். இரண்டு காசோலைகளுக்குரிய தொகையை நான் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்ற விவரங்கள் ம.சா.ஆ.4 ல் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் இடம்பெறவில்லை என்றால் சரிதான். ஹோம் லேண்ட் ப்ராப்பர்டீஸ் 20,47,464/–கொடுத்ததற்கு காசோலை தவிர வேறு எந்த evidence உள்ளதா என்றால் எதுவும் இல்லை. வருமான வரி எதுவும் கட்டுகிறேனா என்றால் ஞாபகம் இல்லை. பணம் நான் கொடுத்தேனா எனக்காக வேறு யாரும் கொடுத்தேனா என்றால் நான் தான் கொடுத்தேன். தாமோதரன் என்பவர் யார் என்றால் எனது மகன். அவர் பெயரில் தான் நான் இந்த மனையை பதிவு செய்ய சொன்னேன் என்றால் சரிதான். 2 காசோலைகளையும் யார் நிரப்பினார் என்றால் நான் தான் நிரப்பினேன். 2 காசோலைகளையும் எந்த சூழ்நிலையில் எங்கு வைத்து கிடைத்தது என்றால் பாண்டியராஜன் பேங்க் மூலமாக அனுப்பினார். இடம் வாங்கினால் registration யார் தயார் செய்வது என்றால் விற்பவர் தான் தயார் செய்ய வேண்டும். இடம் வாங்குபவர் தான் அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து விற்பவர் கையெழுத்து செய்து தருவார் என்றால் சரியல்ல. 20,47,464/–நிலம் வாங்குவதற்கு தான் கொடுத்தேன் என்றால் சரிதான். நிலம் வாங்குவதற்கு பணம் கொடுத்ததால் உரிமையியல் வழக்கு தான் தாக்கல் செய்யவேண்டும் இந்த வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல.

**5.** ம.சா.ஆ 4 க்கு கொடுத்த பதில் ம.சா.ஆ. 7 என்றால் சரிதான். ம.சா.ஆ. 7 க்கு பதில் அறிவிப்பு என்னால் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. என்னால் எனது முதல் விசாரணை சத்தியபிரமாண பத்திரம் 4 வது பத்தியில் எதிரி கூறும்போது காசோலைகள் வங்கியில் செலுத்தி பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு கூறினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 11.04.2024 ம் வருடம் காசோலையை வசூலாக்கும்படி கூறினார் நாங்கள் மறுநாள் வங்கியில் கொடுத்தோம். ம.சா.ஆ. 7 ல் போடாதீர்கள் என்று கூறியுள்ளோம் ஆனால் காசோலை எங்கள் விருப்பதிற்கு வசூலுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 20,47,464/– பணத்திற்கும்

நாங்கள் எதிரியை மிரட்டியதால் அவர்கள் கம்பெனி காசோலை 2 இருந்து கொடுத்து மீதி தொகைக்கு அவரது சொந்த காசோலையை ஜாமீனுக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றாலும், எனக்கு மேற்சொன்ன தொகையை கொடுப்பதற்கான பொருளாதார நிலைமை இல்லை என்றாலும், இந்த வழக்கில் பங்குதாரர் நிறுவனத்தையும், மற்றொரு பங்குதாரரையும் சேர்க்காத காரணத்தினாலும் ம.சா.ஆ. 7 க்கு பதில் எங்களால் கொடுக்காததாலும், என்னால் இவ்வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றாலும், அவர்கள் கம்பெனி காசோலை 2 இருந்து கொடுத்து மீதி தொகைக்கு அவரது சொந்த காசோலையை ஜாமீனுக்கு கொடுத்தார் என்றாலும், எதிரிகள் ஒப்புதல் இல்லாத காசோலைகளை நான் வங்கியில் deposit பண்ணிய காரணத்தினாலும், வழக்கு காசோலையை நான் எதிரியை மிரட்டி காசோலை வாங்கியதாலும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.06 10:28:40 +0530